
# யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்



## சண்முகதரிசனம்

## 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்

கல்வயல் சாவகச்சேரி

# சண்முகதரிசனம் - 01

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை பெயர் :- யா/ கல்வயல் ஸ்ரீ

சண்முகானந்த வித்தியாலயம்

பாடசாலை முகவரி :- கல்வயல் சாவகச்சேரி.

கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் :-

கல்வயல், J/305

ஸ்தாபகர் :- திரு.வைத்திலிங்கம் விநாயகமூர்த்தி

ஸ்தாபிதம் :- 18.06.1930

பாடசாலை வகை:- Type iii

வகுப்புக்களின் பரம்பல்:- 1-5

அதிபரின் பெயர் :- திரு. கனகரத்தினம் மகிந்தன்.

தொலைபேசி இலக்கம்:- 0774010516

மின்னஞ்சல் முகவரி :-school1003036@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இலச்சினை

## மகுடவாசகம் (MOTTO)

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *இலச்சினை விளக்கம்*

கோடைப் பயிருக்குக் குளிர் மழை போலக் கல்வி வறட்சியில் இருக்கும் மாணவனுக்கு ஆசிரியையானவள் கல்வி மழையாக அமைவதையும் ; தாய்மை உணர்வுடன் அரவணைத்து வழிப்படுத்துவதையும், முக்கோண வடிவம் கணிதத்தையும், தாவரத்தின் இலைகள், ஆகாயம், நீர் ஆகியன இயற்கையுடன் ஒன்றித்துக் கற்க வேண்டும். என்பதையும் ; மாணவனுக்கு கீழ் இருக்கும் திறந்த கண்ணானது பிரக்ஞை பூர்வமாக விழிப்புடன் கருமமான கற்றலில் கண் வைக்க வேண்டும் என்பதையும் ஆசிரியருக்குப் பின்னே மறைந்துள்ள கரும்பலகையானது வகுப்பறையையும் சுட்டி நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூரநோக்கு (Vision)

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் தலை சிறந்த ஆரம்பப்பாடசாலை.

## பணிக்கூற்று (Mission)

சமுகப்பங்கு பற்றுதலுடன் கூடிய சிறுவர் நேய அனுகுமுறை கொண்ட, செயற்பாடு சார் கற்றல் முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உவப்பான கற்றல், கற்பித்தல் சூழலை ஏற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்.

இயற்றியவர் : திரு. எஸ். ஞானப்பிரகாசம்
தாளம் : ஆதி

இசையமைததவர் : பொன் ஸ்ரீ வாமதேவன்
இராகம் : பூபாளம்

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த – எங்கள்
கருணைத் தாயே கலைவளம் தா
நெல் வயலோடு கல்வயல் சூழ் சைவ
நெறிமுறை தமிழ்மொழி இரு விழி எனவளர்
(கல்வயல் ஸ்ரீ)

பாலர் கூடிப் பாஞ்குறவே – நல்ல
பண்புடன் மும்மகள் அருள் பெறவே
சீலர்களாகத் தினம் தினமே – எண்
திசையெல்லாம் புகழி பெறவே
(கல்வயல் ஸ்ரீ)

சொல்வதெல்லாம் உன் திருநாமம் - நாம்
துதிப்பதெல்லாம் உன் திருபாதம்
செல்வது உன் திரு ஆலயமே – உன்னை
சேவிப்பது எங்கள் பாக்கியமே.
(கல்வயல் ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரின் உள்ளத்திலிருந்து......

மாறிவரும் உலகமயமாக்கல் போக்கிற்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கி யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய மாணவர்கள் தமது எழுத்தாக்க ஆற்றலை வெளிக்கொணர்வதற்கான ஒரு களமாக " சண்முக தரிசனம் " என்ற இச்சஞ்சிகையை உருவாக்க எண்ணியிருந்தேன். இச்சஞ்சிகை மாணவர்கள் தமது ஆக்கங்களை பதிவிட உதவுவதுடன் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவர்களாக மாற்ற உதவும்.

தரம் – 05 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்விகற்று வெளியேறும் போது இச்சஞ்சிகை ஒவ்வொரு ஆண்டும் வெளிவரவேண்டும் என்பது எனது விருப்பம். இந்த ஆண்டு [2017] முதல் இச்சஞ்சிகை ஆண்டு தோறும் வெளிவரும் சண்முக தரிசனம் – 01 என வெளிவரும் இச்சஞ்சிகை மாணவர்களை எதிர்காலத்தில் நாம் கற்ற பாடசாலை நினைவுகளை மீட்டிப் பார்க்க உதவும் ஒரு சான்றாக அமையும். மேலும் இச்சஞ்சிகை வெளிவர உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

- நன்றி –

திரு. க. மகிந்தன்

அதிபர்.

யா / கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்,

கல்வயல்,

சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை அதிபர்




திரு க. மகிந்தன் B.A(Hons) Eco.Spe, PGDE, MED (Hons) SLPS III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன்மை நிலை ஒன்று இரண்டு ஆசிரியர்கள் சார்பாக..

இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு "சண்முக தரிசனம் 01" எமது பாடசாலையில் தரம் 5 மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. எமது பாடசாலை மாணவர்கள் கடந்த பல வருடங்களாக புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றிச் சாதனைகளைப் படைத்து வருகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே. அதனால் தான் 2016 , 2017 ஆம் ஆண்டுகளில் தரம் ஒன்று அனுமதியில் பெரும் மாறுதல் நிகழ்ந்துள்ளன. தரம் ஒன்று மாணவா 32 ஆக உயர்வடைந்துள்ளது. நேர்முகத் தெரிவு மூலம் மாணவர் அனுமதி இடம்பெறுகின்றது. அதற்கேற்ப கற்றல், கற்பித்தலிலும் முன்னேற்றகரமான ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் வலய ரீதியிலான செயற்பட்டு மகிழ்வோம், துரித கணிதச் செய்கை, சித்திரப் போட்டி என்பவற்றில் எமது மாணவர்கள் வெற்றியீட்டி வருகின்றமை அதனை உறுதிப்படுத்தி நிகழ்கின்றது.

மேலும் அதனை வலுவூட்டக்கூடியதாக சண்முக தரிசனம் 01 தரம் 5 மாணவர்களின் சுயமான ஆற்றல்களைத் தாங்கி வெளிவருகின்றது. தற்போது மாணவர்களின் சுய ஆற்றல்களுக்கு மதிப்பளிக்கும் காலம் அவர்களின் ஆக்கங்கள் வருங்காலங்களிலும் இன்னும்மெருகூட்டப்பட்டு எம் பாடசாலையினதும், அதிபர், ஆசான்களினதும் பெருமைமையைக் கூட்டும் என்பதில் ஐயமில்லை. அம் மாணவர்களுக்கு சிரேஷ்ட ஆசிரியர் என்கின்ற வகையில் ஆசிரியர்கள் சார்பாக வாழ்த்துக்கள் கூறுவதில் பெருமை அடைகின்றேன்.

- நன்றி –

திருமதி . இ. சுந்தரலிங்கம்

சிரேஷ்ட ஆசிரியை.

யா / கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்,

கல்வயல்,

சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து....

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய தரம் 5 மாணவர்களால் 2017 ஆண்டு வெளியிடப்படும் " சண்முக தரிசனம் 01 " என்னும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருவகையடைகின்றேன்.

மாணவர்கள் தனியே புத்தகப்படிப்புடன் நின்றுவிடாது அவர்களின் உள்ளார்ந்த திறன்களான பேச்சு, பாடல், நாடகம், எழுத்து போன்றவற்றையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இத்திறன்களை வளர்க்கும் செயற்பாடுகள் ஊடாக மாணவர்களிடையே மொழிவிருத்தி, வாண்மை விருத்தி என்பன ஏற்படும். அத்தோடு வாசிப்பு பழக்கத்தையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் வாசிப்பு திறன் மட்டும் அல்லாது எழுத்தாற்றலும் சேர்ந்து வளரும்.

அந்த வகையில் மாணவர்களின் சிந்தையில் உதித்து எழுதிய இவ் எழுத்தாக்கங்களான கவிதைகள், கதைகள், கட்டுரை பாடல்கள், தரம் மிக்கதாகவும் கருத்துச் செறிவு மிக்கவையாகவும் காணப்படுகின்றன. "மாற்றம் ஒன்றே மாறாதது" என்ற கூற்றுக்கமைய மாணவர்கள் தன்னையு, தன்னுடைய வாண்மையையும் மாறிவரும் உலகத்துக்கேற்ப இற்றைப்படுத்தி கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் இனிவரும் காலங்களிலும் நல்ல கல்வியறிவோடு, எழுத்தாற்றல், உள்ளார்ந்த திறன்கள் என்பவற்றையும் வளர்த்தெடுத்து நாட்டிற்கும், வீட்டிற்கும் ஏற்ற நல்ல பிள்ளைகளாக திகழ வேண்டும் என மனமாற வாழ்த்துகின்றேன்.

- நன்றி –

திருமதி . காயத்திரி அஜந்தன்

தரம் 5 (2017)வகுப்பாசிரியர்

யா / கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்,

கல்வயல்,

சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசிரியர் அணி



செல்வி க. செல்வராணி, திருமதி றா. லோகேந்திரன், திருமதி இ. சுந்தரலிங்கம்,
திரு க. மகிந்தன்(அதிபர்), செல்வி க. சசியோகா, திருமதி கா. அஜந்தன், திருமதி சா. சிவதாசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகதரிசனம் – 01

## மாணவர் ஆக்கம்

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்



தரம்-5 மாணவர்கள் - 2017

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


1. ஆறுமுகநாவலர்
2. நூலகம்
3. கணினி
4. நாட்காட்டி
5. சூழலை பாதுகாப்போம்.
6. நான் ஒரு கிழிந்த சட்டை
7. வீட்டுத்தோட்டம்
8. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.
9. நூலகம் - (கவிதை)
10. புத்தகங்கள் எமது நண்பர்கள்
11. உழவர் திருநாள்
12. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
13. என்னைக் கவர்ந்த புலவர்
14. நான் விரும்பும் பாடசாலை சூழல்
15. சுற்றுச்சூழல் சுத்தம்
16. நன்றி மறவேல்
17. பிரதேச வழக்குச் சொற்கள்
18. வீதி விபத்து
19. நீர் வளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுமுகநாவலர்

சைவசமயத்திற்கும்,தமிழ்மொழிக்கும்பெரும்பணியாற்றிய சைவதமிழ் பெருமகனார் ஆறுமுகநாவலர் ஆவார். இவர் 1822ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை,தாயார் பெயர் சிவகாமியம்மையார் பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம் தமிழ்நாட்டு புகழ்மிக்க சைவஆதீனமாக விளங்கிய திருவாவடுதுறையாதீனம் இவரின் சைவதமிழ் பணிகளை பாராட்டி நாவலர் பட்டம் வழங்கி கௌரவித்த அன்றுமுதல் ஆறுமுகநாவலர் என அழைக்கப்பட்டார். இவர் வாழ்ந்து பணியாற்றிய காலம் இலங்கையையும்,இந்தியாயையும் ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலம் மேற்கத்தேய கலாச்சார ஆங்கில கல்வி முறை வேற்றுமத செல்வாக்கு என்பன அப்பொழுதும் மக்களிடையே பரவியிருந்தது. அதேவேளை சைவசமய தமிழ்மொழி சைவமரபுகல்வி சைவதமிழ் கலாச்சாரம் என்பன சிறப்புற்றிருந்த நிலையில் காணப்பட்டன. இவர் வாழ்ந்த காலச்சூழ்நிலையே சைவசமயத்தையும்,தமிழையும் வளர்ப்பதற்காக அவர் செய்த தியாகங்கள் அளப்பரியன. நாவலர் இளமைப் பருவத்திலே கல்வியறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினார். சிவபக்தி நிறைந்தவராகவும் சைவஆசாரசீலங்களை வாழ்க்கையில் இம்மியளவிலும் தவறவிடாது கடைப்பிடித்தவராவார். சைவசமயச் சூழலில் சைவபிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்பதை உணர்த்தினார். நாவலர் வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் சைவபிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் பாடசாலையை நிறுவினார்.

வி.கனிஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்

1. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.
2. நூலகம்-நூலகம்+அகம்,நூல்-புத்தகம் புத்தகங்களின் இருப்பிடம் அதாவது புத்தகங்களை சேகரித்து பாதுகாத்து வைக்கும் இடம்.
3. புல அறிஞர்களின் வாசிப்பிடமே நூலகம்.
4. நூலகங்களின் அறிவியல்,வானியல்,பொருளியல்,விஞ்ஞானியல் போன்ற பலவகை நூல்கள் இருக்கும்.
5. அறிவவுத் தேடலுடன் இருப்போரின் தேடலை நிறைவு செய்யும் இடம்.
6. நூலகங்கள் பாடசாலைகள் தோறும் காணப்படுகின்றன.
7. அங்கு அமைதி பேணப்படுவது சிறப்பிற்குரியது.
8. பல நூல்களை கற்பதனால் மனிதன் அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

யோ.லக்சிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினி

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இன்றைய உலகு கணினிமயமாகி விட்டது. எங்கு பார்த்தாலும் கணினியின் ஆதிக்கமே காணப்படுகின்றது. அலுவலகம் என்றாலுஞ் சரி வங்கிகளாயினுஞ்சரி வணிகநிலையங்களாயினுஞ் சரி எங்கும் ஒரே கணினி மயம். இவை யாவற்றுக்கும் மேலாக வசதி படைத்தோர் பலரது வீடுகளிலும் கணினி தனக்கென ஓரிடத்தைப் பெற்றுவிட்டது. அத்தகைய கணினிபொறி பற்றி நாமும் அறிந்திருப்பது நல்லது. கணினிப்பொறி தீடீரெனத் தோன்றியது ஒன்று. அன்று சிறிய சிறிய எண்களை கூட்டுவதற்கு வசதியாக முதலில் சாதாரணக்கூட்டல் பொறியொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது 1642ஆம் ஆண்டு பிரான்சு நாட்டை சேர்ந்த விஞ்ஞானியான பிளெஸ் பஸ்கால் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதை தொடர்ந்து கூட்டல் மட்டுமன்றி கழித்தல்,பெருக்கல்,வகுத்தல் போன்ற கணித செயற்பாடுகளுக்கும் உதவும் வகையில் மற்றுமொரு பொறி கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொறி கணிப்பு கல்குலேற்றர் என அழைக்கப்பட்டது. இதனை ஜேர்மனி கணித அறிஞரான கொற்பிறிட் இலைற் என்பவர் வடிவ மைந்தர் இன்றைய நவீன கணினி உருவாக்கத்தில் வழிகாட்டும் விதமாக 1833ஆம் ஆண்டளவில் குறைந்த செலவில் கணினி உற்பத்தி செய்யப்பட்டன் 1990ஆம் ஆண்டுக்கு பின்னர் உருவாக்கப்பட்ட திறன்களை கொண்டனவாக அமைந்தன. கணினியின் வளர்சிசிப் படிகளை அறிந்த நாம் அதனுடைய பகுதிகள் பற்றிச்சிறிது பார்ப்போம். தொலைக்காட்சி போன்ற திரையமைப்பு இதற்குண்டு.

பா.கீர்த்திகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்காட்டி

நாளை காட்டும் நாட்காட்டி
கிழமையும் சேர்த்தே அது காட்டும்
நாளும் நாம் அதை கிழித்தாலும்
பொருத்தப்படாத நாட்காட்டி

திட்டம் தீட்ட உதவிடுமே
தினமும் ஞாபகப் படுத்திடுமே
நடத்தும் நிகழ்வை குறித்திடுமே
நாள் குறிப்பேடாகப் பயன்படுமே

அனைத்து மதத்தின் பண்டிகையும்
ஆன்றோர் சான்றோர் பிறந்த நாமும்
நல்ல கெட்ட நேரத்தையும்
நாளும் சொல்லும் நாட்காட்டி

ஜனவரியில் பிறக்கும் நாட்காட்டி
டிசம்பரில் ஆயுளை முடித்திடுமே
அழிவு என்றும் இதற்கில்லை
மீண்டும் புதிதாய் பிறந்து வரும்

-சி.ஐங்கரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலை பாதுகாப்போம்.

சைவசமயம் இறைவன் இயற்கையோடு இயைந்திருப்பது பற்றி எடுத்துக் கூறுகின்றது. எனவே இயற்கையுடன் மனிதன் அன்பான உறவைப் பேணுதலே உயர்ந்த வாழ்கையாகும். அவன் உலகத்திலே தோன்றும் பொழுது இயற்கைச் சூழலுடன் இணைகின்றான். அச்சூழலே அவனது வாழ்க்கையை நிர்ணயிக்கின்றது. மனிதனது வாழக்கை அகச்சூழல், புறச்சூழல் என்பவற்றால் உருவாக்கம் பெறுகின்றது. அகச்சூழல் மனிதனின் ஆன்மா சம்மந்தமானது. புறச்சூழல் இயற்கை சம்பந்தமானது புறச்சூழலில் இயற்கைவளங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன. நாம் வாழும் இப்பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள நிலம்,நீர்,தீ,காற்று,ஆகாயம் என்னும் ஐம்பூதங்களின் இயக்கத்திற்கு காரணமாக இருப்பது இறைபக்தியே இப்பூவுலகில் வாழும் உயிரினங்களின் வாழ்விற்கு இவை ஒவ்வொன்றும் அத்தியாவசியமானவை.

சூழல் என்னும் போது நிலம்,நீர்,வளி,உயிரினம் என்பன முக்கியமாக கருத்தில் கொள்ளப்படுகின்றன. நிலமகளை தாயாகவும்,தெய்வமாகவும் போற்றும் மரபும் சைவத்தில் உண்டு. பண்டையத் தமிழ்மக்கள் சங்ககாலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுக்கும் உரிய தெய்வங்களாக முறையே முருகன்,திருமால்,இந்திரன்,வருணன்,கொற்றவை ஆகிய தெய்வங்களை போற்றி வழிபட்டனர். கோவில் அதன் சுற்றாடலின் தூய்மை என்பன பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் சமயத்துடன் இணைந்த விதத்தில் மக்கள் மத்தியில் பண்டைய காலம் தொட்டு நிலைபெற்றிருந்தது வேதகாலத்தில் வாழ்ந்த மக்கள் இடி,மழை,காற்று,நீர் ஆகியவற்றில் அளப்பரிய சக்தி உண்டென்பதைக் கண்டனர். இச்சக்தியை இறைவனாகப் போற்றினர். அக்கினி, இந்திரன், வருணன், வாயு ஆகியவற்றின் மீது தோத்திரப் பாடல்களைப் பாடிப்பரவினார். நாயன்மார்களுள் இயற்கையில் இறைவனை கண்டவராக சிறப்பித்துப் போற்றப்பட்டவர் திருஞானசம்பந்தர் இவரது திருகேதீச்சர பதிகத்தில் வந்துள்ளது.

நாம் வீடுகட்டும் பொழுது வாஸ்த்து சாஸ்திரத்தையும் சூழலையும் கருத்தில் கொண்டு கட்ட வேண்டும் என்பதைக் கூறுவது வீடுகட்டும் பொழுது வாழ்வாதாரமான சிறந்த காற்றோட்டமும் சுத்தமான நீரும் பெறக்கூடிய வகையில் அமைத்தல் வேண்டும். வீட்டைச்சுற்றி சிறந்த பூந்தோட்டம்,நிழல்தரும் மரங்கள், கனி தரும் மரங்கள் முதலானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டப்பட வேண்டும். வீட்டுச் சூழலுடன் இணைந்து வாழும் மனிதன் வாழ்க்கையில் அமைதியும,ஆனந்தமும் பெறுகின்றான். தூய்மையாக இருக்கும் வீட்டில் தெய்வம் உறைவதாக நம்பப்படுகின்றது. கிராமத்தில் உள்ள இயற்கைவளங்களை தூய்மையாக வைத்திருக்கும் போது கிராமம் அழகு பெறுகின்றது. மக்கள் சுபீட்சமும் அடைகின்றனர். நகரம் மக்கள் அடர்த்தியும்,போக்குவரத்து நெரிச்சலும் சிறிய பெரிய தொழிற்சாலையும் பல உயரிய கட்டங்களைக் கொண்டது அதனை மாசடையாது பாதுகாப்பதற்கு மரங்களை நாட்டுதல்,கழிவுகளை அகற்றுதல்,கழுவு நீர்களை அகற்றுதல்,கழிவுப் புகைகளைக் கட்டுப்படுத்துதல் முதலான பணிகளில் ஈடுபட்டு நகரின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முயல வேண்டும்.

இவ்வாறு சைவ மதத்தை சார்ந்த இயைய சமுதாயத்தவராகிய நாம் சூழலையும் அதன் முக்கியத்துவத்தையும் கருதில் கொண்டு அவற்றைப் பேணிக் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிப்போம்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திடுவோம்."

அ.டினோஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ஒரு கிழிந்த சட்டை

நான் அழகு மங்கிய, கிழிந்த ஒரு பட்டுச்சட்டை இந்தப் பழைய துணிகள் கிடக்கும் பெட்டியில் தேடுவாரின்றி ஒரு வருடமாகக் கிடக்கின்றேன். என் நிலையை எண்ணிக்கொண்டு கண்ணீர் விடுகின்றேன். என் இளமைப் பருவத்தை ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறேன். மூன்று வருடங்களுக்கு முன் என் இளமைப்பருவத்தை நான் இருந்த நிலை என்ன? எனக்கிருந்த அழகென்ன? மதிப்பென்ன? அதை நினைக்க நினைக்க என் மனம் கலங்குகிறது. என் கதையைக் கேட்க உங்களுக்கு விருப்பமாய் இருக்கும். சொல்லுகிறேன் கேளுங்கள். நான் தமிழ் நாட்டிலுள்ள காஞ்சிபுரத்திலுள்ள வீடு ஒன்றில் பட்டுத்துணியாக நெய்யப்பட்டேன். சென்னையில் உள்ள தையற் தொழிலகம் ஒன்றைச் சேர்ந்த தொழிலதிபரினால் வாங்கிச் செல்லப்பட்டேன். அவருடைய தொழிலகத்தில் என்னை அழகிய சட்டையாக வைத்தனர். என் போன்றோர் பலர் அத் தொழிலகத்தில் இருந்தனர். ஒரு நாள் கொழும்பிலுள்ள படவைக் கடை உரிமையாளர் ஒருவர் அங்கு வந்தார். ஆவர் என்னையும் போன்ற பலரையும் பார்வையிட்டார். பின்னர் எங்களை கொழும்புக்கு அனுப்புமாறு கூறிப் பணம் செலுத்திச் சென்றார். சில நாட்களின் பின்னர் கப்பலில் பயணம் செய்து கொழும்புத் துறைமுகத்தை அடைந்தோம். ஆங்கிருந்த குறித்த புடவைக்கடைட எங்களை தமது கடைக்கு எடுத்துச் சென்றார். இவருடைய அலுமாரி ஒன்றில் அழகாக இருந்தேன்.

சி.லக்சிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்தோட்டம்

வீட்டுத்தோட்டம் வீட்டுத்தோட்டம்
விரும்பி நாங்கள் செய்வோம்
பாட்டுப் பாடிப் பாட்டுப் பாடிப்
பயிர் வகைகள் வளர்ப்போம்

வீட்டின் அருகே தேடி நாங்கள்
விரும்பி நிலத்தைத் தெரிவோம்
வேலி போட்டுக் காப்பதற்கும்
வேண்டும் வகைகள் செய்வோம்

மண்ணைக் கொத்தி பண்படுத்தி
மகிழ்ந்து பாத்தி அமைப்போம்
பசளையிட்டுக் குழியும் தோண்டிப்
பாங்காய் விதைகள் நடுவோம்

நாளும் பொழுதும் பயிர்கள் வளர
நன்கு நீரை வார்ப்போம்
களைகள் பிடுங்கி அவற்றை நாமும்
கண்ணைப் போலக் காப்போம்

கத்தரி வெண்டி தக்காளி தன்னில்
காய்கள் நன்கு காய்க்கும்
களிப்பினோடு பிடுங்கி அவற்றைக்
கறி சமைக்கக் கொடுப்போம்

பந்தலில் தொங்கும் பாகல், புடோல்
பார்த்து நாங்கள் பறிப்போம்
பட்சமோடு அம்மாவிடம்
பாகம் செய்யக் கொடுப்போம்

வீட்டுத்தோட்டம் வீட்டுத்தோட்டம்
நாங்கள் விரும்பிச் செய்வோம்
நாட்டின் வளத்தைப் பெருக்க நாங்கள்
நாளும் பொழுதும் உழைப்போம்

ப.அனித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது ஆன்றோர் வாழ்த்து. மனிதன் வாசிப்பதால் மென் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். நாம் வாசிக்கும் பகுதி சிறிய தென்றாலும் சிக்கவில்லை ஆனால் பெரிய பந்தியை வாசிக்கப் போகின்றோம் என்றால் நாம் வாசிக்கும் ஒவ்வொரு பந்தியிலும் முக்கிய கருத்துக்கள் போடப்பட்டிருக்கும் முக்கியமான கருத்துக்களை குறிப்பெடுத்து வைத்திருத்தல் நன்று. குறிப்பெடுத்தல் வாசித்த விடயத்தை மீட்டுப் பார்ப்பதற்கு உதவும். ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டும் என்பதற்காகதான் ஒவ்வொரு நூலகங்களையும் அமைக்கின்றனர். நாம் புத்தகத்தை மட்டுமன்றி சுவரொட்டிகள், பத்திரிகைகள், விளம்பரங்கள், கவிதைகள், கதைகள் என்பவற்றையும் வாசிக்க வேண்டும். பத்திரிகையை வாசிப்பதால் எமக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்ச் செய்திகள் என்பவற்றையும் அறியலாம். எமது நாட்டில் தினசரி பல பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. எங்கு என்ன நடந்தாலும் அவற்றை உடனுக்குடன் பத்திரிகையில் அறிந்து கொள்ளலாம். வீட்டில் இருந்தவாறே உலக விடயங்களை அறிந்து கொள்ள முடியும். புத்திரிகையில் சிறுவர்களுக்கான சிறுகதை, பிறந்தநாள் வாழ்த்துக்கள், பொதுஅறிவு, விடுகதை, வர்ணம் தீட்டல் போன்ற சிறுவர்கள் பகுதிகளும் காணப்படுகின்றன.

நன்றி

-சு.மாதனி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்

அறிவுக்கதவை திறந்து வைக்கும்
கல்வித்தாகத்தை தீர்த்து வைக்கும்

பணம் இல்லாமல் பல கல்வியைக் கற்று தரும்
பல பல பண்புகளையும் கற்று தரும்!

நூலகக்கல்வி ஞாயிறு போல
ஞான வெளிச்சத்தைத் தரும்!

பழுதில்லாக்கல்வி
விழுதைப்போல விருட்சமாகும்!

நூலகக் கல்வியால் உலகம் சிறக்கும்
நம் வாழ்க்கை நெறியும் சிறந்து விளங்கும்!

நன்றி

வி.சசிந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகங்கள் எமது நண்பர்கள்

எப்பொழுதோ நிகழ்ந்ததை நிகழ்ந்தது நிகழ்ந்தவாறு நாம் அறிந்து கொள்ள உதவுவது புத்தகங்கள். எங்கோ நடந்ததைக் கண்டு பிடித்து அதை இங்குள்ள நமக்கு எடுத்து விளக்குபவை நூல்களே. எவரோ அறிந்ததை நாமும் தெரிந்து கொள்ளத் துணை நிற்பவை நூல்கள் தான்.

இப்படித்தான் வாழ வேண்டும் என்பது மனித வாழ்க்கை. முன்பு வாழ்ந்தவர்களின் அனுபவங்களையும், அறிவையும் எடுத்துக் கொண்டு அவர்கள் விட்ட இடத்திலிருந்து வாழ்வைத் தொடர்வதால் தான் மனித வாழ்க்கை தொடர்ந்து வளர்ச்சியைப் பெற்று வருகிறது. முன்னோர்கள் அறிவையும், அனுபவத்தையும் இறக்கி வைக்கும் நண்பர்கள் தான் நூல்கள். நூலைப் படைத்தவனும்,நூலைப் படித்தவனும் ஒரு நாள் மாண்டு போனாலும் யாண்டும் யாண்டும் வாழ்பவை வரம் 'பெற்றவை நூல்கள். உன்னிடம் எதையும் எதிர்பார்க்காமல் தன்னை முழுமையாக உனக்கு அளிக்கும் நண்பனே புத்தகங்கள் என்கிறார். அமெரிக்க கவிஞர் ஆயிரம் மலர்களின் மகரந்தச் செகரமே. தேன் கூறுகிறது. ஆயிரம் ஆயிரம் கருத்துக்களின் சேகரமே புத்தகங்கள் இவை வெறும் காகிதங்களின் கற்றை அல்ல. அவை உண்மைகளின் ஊற்றுக்கண். புத்தகத்தை திறப்பவன் அறிவுச் சுரங்கத்தை திறக்கிறான். சிறந்த நூல்கள் மிகச் சிறந்த நண்பர்கள் காலத்தை மிஞ்சி நிற்கிறது. கருத்து மணிகளை உள்ளடக்கியிருக்கிற நூல்களைப் போல் உயர்ந்த பண்புகளை உடைய நண்பர்கள் பெறுதல் அரழது. நண்பர்கள் கூட சில சமயங்களில் சறுக்கிடல் ஏமாற்றி விடக்கூடும். ஆனால் நம்மை எப்போதும் கைவிட்டுவிடாத நல்ல நண்பர்கள் புத்தகங்கள்.

சிந்தனையைத் தூண்டி வளர்க்கும் நூல்களை மனதை உழுது பண்படுத்திப் பயன் விளைவிக்கும் நூல்களைப் படிக்க வேண்டும். நாளும் பொழுதும் உன்னோடு நாவாடிக் கொண்டிருக்கிற என்னை எப்போதும் விழ்த்திடாத நல்ல நண்பர்கள் புத்தகங்களே.

நன்றி வணக்கம்

கே. நிதர்சனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவர் திருநாள்

உருண்டையான உலகம் ஒன்று தங்கி உருண்டு உழல்கிறது. அவற்றுள்ளும் பொறுமையின் இலக்கணமாக பூமி காணப்படுகிறது. இப்பூமி எந்த ஒரு மனிதனும் வேலையற்று காணப்பட மனம் பொறுக்காது தானே இடமாகி விவசாயம் செய்வதற்கு வழியேற்படுத்துகிறது. இதனையே வள்ளுவர் "இலமென்று அசயி இருப்பாரை காணின் நிலமென்னும் நல்லாள் நகும்" என கூறுகிறார்.

உழவர் திருநாள் என்றால் என்ன? இந்நிலத்தினை நிலைக்களமாகக் கொண்டு பயிர்நட்டு பயன் பெற்ற மனிதன் தனக்கு நன்மை செய்த இயற்கைக்கு நன்றிக்கடனாக கொண்டாடும் நாளாகும். இது தைப்பொங்கல் விழா எனவும் அழைக்கப்படுகிறது.

நிலம் எவ்வாறு மனிதனுக்க உதவி செய்ததோ அவ்வாறே பயிர்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் உணவுத் தொழிற்பாட்டிற்கும் சூரியன் இன்றியமையாத பொருளாக இருந்து உதவி செய்கிறது. இதனால் உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காக வருடத்தின் முதல் மாதமாகிய தை மாதத்தின் முதல் நாளில் வெண்பொங்கல் பொங்கி வழிபடுகிறார்கள். இதனால் இதனை ஆசியப் பொங்கல் எனவும் கூறுவர்.

தமிழர்கள் தைபிறந்தால் வழிபிறக்கும் எனும் நம்பிகையில் சூரியனின் சுழற்சியில் முதல் நாளில் இப்பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

உழவர்கள் மட்டுமன்றி ஏனையோரும் இதன் மகத்துவம் கருதி கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. இப்பண்டிகை 04 நாட்கள் கொண்டாடுவது மரபு. தை 01ஆம நாளுக்கு முதல்நாள் வீட்டைச் சுத்திகரிக்கும் கொண்டாடுவது "போகிப்பண்டிகை" எனப்படும்.

போகிப்பண்டிகைக்கு அடுத்தநாள் கொண்டாடுவது தைப்பொங்கல். தைப்பொங்கலுக்கு மறுநாள் கொண்டாடுவது மாட்டுப்பொங்கல். இது உழவிற்கு உதவி செய்த கால்நடைகளுக்காக கொண்டாடுவதாகும்.

மாட்டுப்பொங்கலுக்கு அடுத்தநாள் கொண்டாடுவது காணும் பொங்கல் எனப்படும். அது உற்றார், உறவினர் வீடுகளுக்கு செல்வதாகும்.

உழவர் திருநாள் கொண்டாடுவதன் ஊடாக நன்றி செலுத்துதல், பகிர்ந்துண்ணல், பெரியோரை மதித்தல், உறவினர் உறவு, பிற உயிர் மீதுஅன்பு செலுத்துதல், சுகாதாரம் கடைப்பிடித்தல் போன்ற விழுமியங்கள் பெறப்படுகின்றன.

நாமும் உழவர் திருநாளைப் போற்றி உத்தரமாக வாழ்வோமாக.....

நன்றி வணக்கம்

இ.திருவாசகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

எங்கள் வாழ்க்கை நம் கைகளிலோ?
"மூச்சில் வளரும் கொழுந்துகள்"
எங்களுக்கு உடற்பயிற்சியளிக்கும்மலைகள்
என்ன பரிதாபம் நாம் ஏறிய மலைகள்
என்ன நடந்தது மண்சரிவா?
மண்ணிற்குள் அழுகுரலா?
மலைமாதா பலி எடுப்பவளா?
நம் உறவுகள் எங்கோ?
நம்மை மீண்டும் கலங்கவைப்பாளா?
நாம் நிம்மதியாக வாழலாமா?

நன்றி

த.யுரேமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னைக் கவர்ந்த புலவர்

என்னைக் கவர்ந்த புலவராக உருவெடுத்துள்ளார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். ஊலகின் பல பகுதிகளில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது. சிலமொழியில் பாரதியாரின் ஆக்கங்கள் மொழிபெயர்க்கப்படுகிறது. தமிழ்க்கவியாகத் தோன்றின பாரதி நாளடைவில் அனைந்திந்தியக் கவியாகவும் உலகப் பெருங்கவிஞருள் ஒருவனாகவும் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை எழுந்துள்ளது. இப்பெருமை பாரதிக்கு எவ்வாறு கிட்டியது அவரது உள்ளார்ந்த ஆற்றலையும் உலக நோக்கையும் பலரும் உணரத் தொடங்கியதும் அவன் ஒரு மகாகவி எனும் உண்மை உறுதிப்படலாயிற்று இலக்கிய கர்தாக்களின் புகழுக்கு பரிணாம வளர்ச்சி உண்டு.

உலகின் இலக்கிய ஆசிரியர்களின் உன்னதமான வரிசையில் பாரதியாரை வைத்து நாம் எண்ணுவதைப் போலவே தமிழ் இலக்கியப் பரப்பிலும் காலத்துக்குக் காலம் உருவாகிய பெரும் புலவர்களின் வரிசையில் பாராட்டுகின்றோம். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை இவரின் கவியை வியந்து இரசிப்பார்கள். இவர்பாடிய "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாடல் உலக பிரசித்தி பெற்றது.

ஆற்றல் வாய்ந்த கவிஞராக விளங்கிய பாரதியாரே தனக்கு முன் சென்று கவிகுல திலகங்களை தமிழ் பெருங்கவிஞர்களை போற்றி பாராட்டியதால் தான் அவர்களுக்குப் பெருமை பெருகியிருக்கின்றது. பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்து கொண்டிருப்பதைப் போலவே அவர்களின் அபிப்பிராயங்கள் பலவற்றையும் அடிப்படை உண்மைகளாக ஏற்றுக்கொண்டுள்ளது. பாரதி அடிமைப்பட்டுக்கிடந்த பாரத சமுதாயத்தில் வாழ்ந்தவன். துன்னளவிலும் தனது சமுதாயத்தைப் பொறுத்தளவிலும் அடிமைத்தனத்தை அறிந்தவன் அடிமைத்தனத்தை உள்ளும் புறமும் கண்டவன் அது அவனுடைய அடிப்படை அனுபவமும் அவ் அனுபவத்துடனும் உலகை நோக்கிய பொழுது வேறுபல சமுதாயங்களும் நாடுகளும் அடிமைத்தனத்திலும் தாழ்வுற்று இழிவு நிலையிலும் அல்லற்படுவதைக் கண்டவன். இதனால் அவனது சிந்தனைகள் எல்லாம் கவிதைகளாக உருவெடுத்தன.

அத்தகைய பாரதியாரை நாம் பெருங்கவிஞராக மதிக்கின்றோம் அவர்களது சிந்தனைகள் எல்லாம் பெருமதிப்புப் பெற்றவை இதனால் ஒவ்வொருவர் மனதிலும் பாரதி நீங்கா இடம் பெற்றுவிடுகின்றான்.

கு.ஜானுசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் விரும்பும் பாடசாலை சூழல்

பாடசாலை சூழல் எனும் பொழுது பாடசாலை அமைந்துள்ள சுற்றுச்சூழலைக் குறிக்கும் அதாவது, பாடசாலைச் சூழலானது ஒரு குழந்தையோ மழலையோ பாடசாலைக்குச் சென்று அங்குதங்கி விருப்பத்தோடு கற்பதற்கு உகந்த நிலையை குறிக்கும்.

ஒரு மாணவனோ/மாணவியோ தான் கற்கும் பாடசாலையில் விருப்பு இருக்க வேண்டும். மற்றயது பாடசாலையை சூழவுள்ள விடயங்களில் விருப்பு இருக்க வேண்டும்.

இவ்வாறு நான் விரும்பும் பாடசாலையானது பின்வரும் அம்சங்களை கொண்டிருத்தல் சிறப்பாகுமட எனது வீட்டுடன் நெருங்கிய சூழலை கொண்டிருத்தல் சிறப்பாகும்.

இவ்வாறு இருக்கும் போது எனக்கும் பல நன்மைகள் கிடைக்கவல்லது. நகரை அண்டியவாறு இல்லாது கிராமிய மணங்கமமே பிரதேசமாக இருக்கும் போது அமைதியான சூழலோடு கூடிய கல்வியை நான் பெறக்கூடியதாக இருக்கும் வீட்டிற்கு அண்மையில் உள்ள பாடசாலையில் கற்கும் போது பாடசாலைக்குச் செல்வது சுலபமாக இருக்கும் நான் விரும்புச்செல்லும் எனது அயல் பாடசாலையில் விருப்போடு கூடிய கல்வியை பெறறுக்கொள்ள ஏதுவாக அமையும்.

எனது சகோதர,சகோதரி யாரோடு சென்று கல்வியை கற்றுவர ஏதுவாக அமையும் எமது அயல்சூழல் சகோதர,சகோதரிகளோடு நட்புறவை பெற்று கல்வி கற்க ஏதுவாக அமையும். எனது உறவுகளுடனான நண்பர்கள்,நண்பிகளையும் பெற்றுக் கொள்ள ஏதுவாக அமையும்.

எனது அயற்பாடசாலையில் கல்வியைப் பெறும் போது அதிபர்,ஆசிரியர்களின் நிறைவான ஒத்துழைப்போடு கூடிய கல்வியை பெற்றுக்கொள்ள ஏதுவாக அமையும். அத்துடன் வகுப்பறை கல்வியிலே ஆசிரியர்கள் எம்மை சிறந்த முறையில் வழிநடத்துவார்கள். இதனால் சிறந்த ஆசிரிய,மாணவ உறவு நிலை கிடைக்கும். எனவே,சிறந்த கல்வியோடு கூடிய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஊக்கமுடன் கற்க முடியும்.

எமது பிரதேச நண்பர்களுடனும் ஏனைய நபர்களுடன் போட்டியோடு கூடிய கல்வியோடு மட்டுமன்றி ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட்ட எனக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

நன்றி

இ.சருபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுச்சூழல் சுத்தம்

எம்மை சுற்றி உள்ளவையே சூழலாகும். சுற்றுச்சூழலை நாம் சுத்தமாக பேணுவோமானால் நாம் நோய் நொடியின்றி சுகமான வாழ்வு வாழ முடியும்.

நாம் வாழும் சூழல்,கல்வி கற்கும் பாடசாலை, தொழில் புரியும் அலுவலகங்கள் பொழுது போக்கும் இடங்கள் தரிசிக்கும் ஆலயங்கள் என்பன எமது அன்றாட வாழ்வுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையன. ஆவ்வாறான இடங்களில் குப்பை கூளங்களை கண்ட கண்ட இடங்களில் வீசாமல் குப்பை கூடைகளில் தரம் பிரித்து இடுவதன் மூலம் உள்ளூராட்சி ஊழியர்கள் மூலம் சூழல் சுத்தமடைவதுடன் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய பொருட்களினை மீண்டும் பயன்படுத்துவதனால் சூழல் தூய்மையடைகின்றது.

சுற்று சூழலினை சுத்தமாக நாம் வைப்பதன் மூலம் கொடிய கொள்ளை நோயான டெங்கு காய்ச்சல், மலேரியா காய்ச்சல், யானைக்கால்நோய் என்பவற்றை பரப்பும் நுளம்புகள் எமது சூழலில் பெருகுவதனை தவிர்துக்கொள்ள முடியும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது எவரும் அறிந்த முதுமொழி யாகும். ஆகையால் குறைவற்ற செல்வமான நோயில்லாத வாழ்வினை நாம் வாழ வேண்டுமென்றால் சுற்றுச்சூழலினை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

சுற்றுச் சூழலில் கழிவுகளை உரிய முறையில் அகற்றி தூய்மையான சுத்தமான புதியதோர் உலகத்தினை உருவாக்க சிறுவர்கள் ஆகிய நாம் உழைப்போம். சுத்தத்தினைப் பேணி என்றும் சுகமாக வாழ்வோம்.

நன்றி

செ.அபிஷ்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவேல்

"நன்றி மறப்பது நன்நன்று நன்றல்ல

தன்றே மறப்பது நன்று"

என்பது வள்ளுவர் கூறிய வாய்மொழியாகும். மனிதராக பிறந்த நாம் பிறர் எமக்குச் செய்யும் உதவியை என்றுமே மறந்து விடல் ஆகாது. நாங்கள் என்றுமே தனித்து வாழ்ந்து விட முடியாது. எமது தேவைகளை நிறைவேற்ற நாம் பலரதும் உதவியைப் பெற வேண்டியிருக்கும். ஆவ்விதமாக நாம் பெறும் உதவியை என்றும் நினைத்திருக்க வேண்டும். ஆனால் யாராவது எமக்குத் தீமை செய்திருந்தால் அதனை நாம் உடனே மறந்து விட வேண்டும். எமக்குச் செய்த உதவி பெரிதாக இருக்கலாம்,சிறிதாகவும் இருக்கலாம் ஆனால் அவ்வுதவி தக்க தருணத்தில் செய்யப்பட்டதாக இருப்பின் அதனை இவ்வுலகைவிடப் பெரிதாக மதிக்க வேண்டுமென வலியுறுத்துகிறார் வள்ளுவப் பெருந்தகை.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மனப்பெரிது"

நன்றியை என்றும் போற்றும் சான்றோர் அதனைப் பெரிதாகவே மதித்து வாழ்வார். அந்நன்றிக்கடனூடாத் தம்மை அர்ப்பணம் செய்ய துணிவர். "நன்றியை பயன் தூக்கி வாழ்தல் நன்றி இனிது" என்று வாழ்பவர்கள் அவர்கள் அதனை வள்ளுவர் மேலும் விளக்குகிறார்.

"தினைத்துணை நன்றி செயினும்

பனைத்துணையாக் கொள்வர் பயன் பெறுவர்"

தினைக்கும் பனைக்கும் எத்தனை வித்தியாசம் செய்த உதவி தினையாக இருந்தாலும் அவ்வுதவியை பனையாகவே மனதிலே கொண்ட மாந்தர் எம்மதியில் வாழத்தான் செய்கிறார்கள்.

"எந்நன்றி கொன்றார்குமுய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொண்டமகற்கு"

இ.ஷாலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச வழக்குச் சொற்கள்

பேச்சு மொழி, எழுத்து மொழி என மொழியில் இரு வடிவங்கள் உள்ளன. இவ்விரு வடிவங்களும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடையனவாக இருந்த போதும் வேறுபட்ட வடிவங்களாகவே இயங்குகின்றன. மக்கள் ஒன்றாடத் தொடர்பாடலின் போது பேச்சு மொழியையே கையாளுகின்றனர். பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் பேச்சு மொழியைக் கையாண்டு எழுதும் வழக்கம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. பேச்சு மொழி ஒரு நாட்டுக்குள்ளே பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டதாக அமைந்திருக்கிறது. அதேவேளை சமூகத்துக்குச் சமூகம் வேறுபட்டதாகவும் பேச்சு மொழி அமைந்திருக்கின்றன. பிரதேச ரீதியாகவும்,சமூக ரீதியாகவும் வேறுபட்டு வழங்கும் பேச்சு வழக்குச் சொற்களையே பிரதேச வழக்குச் சொற்கள் என மரபு இலககணத்தில் குறிப்பிடுவார். பிரதேச வழக்கச் சொற்கள் இரண்டு வகையில் பாகுபடுத்தி நோக்கத்தக்கன. பிரதேசத்துக்குரிய தனித்துவமான சொல் வழக்குகள் ஒன்று பேச்சு மொழியில் ஒலி மாற்றமடைந்து வழங்குவது இன்னொன்று, குச்சொழுங்கை, பேந்து, விதானை, குறுகி. உமல், லயம் போன்றன பிரதேசத்துக்குரிய பிரத்தியேக வழக்குச் சொற்கள் ஆகும். காத்து, இதிலை, வெரசா, மனே போன்றவை ஒலி மாற்றமடைந்து வழங்குபவை. இனி பின்வரும் சொற்களை படித்து பிரதேச வழக்கு வழக்குச் சொற்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

ர.கம்ஷனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்து

ஒரு நாள் எங்கள் பாடசாலை பகல் ஒரு மணியுடன் இடை நிறுத்தப்பட்டது. வழக்கமாக இரண்டு மணிக்கு விடும் பள்ளிக்கூடம் இன்று ஏன் ஒரு மணிக்கு விடுகிறது என அறிய மாணவர்கள் ஆவல் கொண்டனர். எங்கள் பள்ளிக்கூட வாசலுக்கு நேராக வீதியில் ஒரு விபத்து நடந்தது தான் காரணம் என்று அறிந்து கொண்டார்கள். யாரோ ஒருபாட்டி மாங்காய் பறிக்க போனதாம் வீட்டுக்காரன் கண்டித்து நாயை விரட்டி விட்டானாம். நாய் துரத்திப்பாய ஓடிய பாட்டி றோட்டுக்கு வர றோட்டால் வந்த டொல்பின் அடிச்சு ஆள் அந்த இடத்திலேயே சரியாம் எனஒரு மாணவன் தான் அறிந்த விடயத்தை ஏனையோருக்கும் சொன்னான். என்காதில் இந்தச் செய்தி விழுந்ததும் சட்டென அயலில் இருந்த இலட்சுமி பாட்டி நினைவுக்கு வந்தது. கீதம் பாடி முடிந்ததும் மாணவர்கள் விபத்து நடந்த இடத்திற்குச் செல்ல அவசரப்பட்டார்கள். வழக்கம்போல் மாணவத்தலைவர்கள் அவர்கள் வகுப்பு வகுப்பாக வெளியே செல்ல வழிப்படுத்தினார்கள். நாங்கள் கதைத்துக் கொண்டு விபத்து நடந்த இடத்திற்கு வந்தது. நான் கண்ட காட்சி என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இறந்து கிடந்த இலச்சுமி பாட்டியைக் கண்டு என் கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது. பாட்டியை அடித்த வாகனத்திலிருந்து அப்பிள் பழத்தை ஒருவர் நீட்டினார் பாட்டியின் கையில் இருந்த மாங்காய் இரத்த வெள்ளத்தில் அப்பிள் பழம் போலவே சிவப்பாக இருந்தது.

நன்றி

ந.கிருஷாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர் வளம்

இயற்கை வளங்களில் நீரும் ஒரு வளம். இதனை மனிதன் பல்வேறு தேவைக்கு பயன்படுத்துகின்றான். இந்த நீர் வளம் இல்லாவிடில் பலநாடுகளில் வரட்சி ஏற்படும். ஆறு, கடல் கிணறு மழை நீர்வீழ்ச்சி என்பவற்றின் மூலம் நீரினை பெற்று வாழ்கின்றோம். தாவர, விலங்குகளின் உயிர்வாழ்வுக்கு நிர் வளம் மிகவும் அவசியமாகும். நாம் வாழும் இப்பூமியிலே 1 சதவீதம் நன்னீர் உண்டு. எனவே 1% சதவீத நன்னீரை தேவையில்லாமல் பயன்படுத்தக்கூடாது. குழாய் நீரை திறந்துவிட்டு மற்றைய வெலைகளில் ஈடுபடக்கூடாது. விவசாயத்திற்கும் நீர்மின்னுற்பத்திக்கும் நீர் பங்களிப்ப வகிக்கின்றது. காடுகளை மனிதன் அழிப்பதால் மழை விழ்ச்சி குறைவடைந்து நாட்டில் நீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது.

வானிலிருந்து விழும் மழை நீரை சேகரித்து எமக்கு தேவையான நேரங்களில் நாம் பயன்படுத்தலாம். நாம் உயிர்வாழ்வதற்கும் நீர் அவசியம். எல்லா தேவைகளுக்கும் நீர் பயன்படுத்தினாலும் விவசாயத்தொழிலுக்கு மட்டுமே நீர் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. நீருக்க பல இயல்பகள் உண்டு. இவ்வாறு இன்னும் பல தேவைகளுக்கு நீர் பண்படுத்தப்படுகின்றது. இந்த அருமையான நீர் வளத்தை அசுத்தமாக்காமலும் வீணாக்காமலும் பயன்படுத்த வேண்டும்.

நன்றி

இ. சுபீட்சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தீபம் பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ். வீதி, யாழ். 077 250 6234

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org